**28.02.2020**

## பத்திரிக்கை செய்தி

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில், கட்டம்.2இல் 3, 4 மற்றும் 5 ஆம் வழித்தடங்களில் பணிகளைத் தொடங்கிட நில எடுப்பு அலுவலர்களால் 117.12.37 ஹெக்டேர் நிலம் எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது மட்டுமின்றி நில உரிமையாளர்களிடம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அலுவலர்களால் நேரடி பேச்சுவார்த்தை மூலமாகவும் நிலம் எடுக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய நடவடிக்கையின் பயனாக வழித்தடம்.3-இன் பணிகளுக்காக நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் ரோடு, குட் ஷெப்பர்டு பள்ளி நிர்வாகத்தினரிடமிருந்து 17,495 சதுர அடி நிலம் நேரடி பேச்சு வார்த்தை மூலம் பெறப்பட்டது. இந்த நிலத்திற்குரிய இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) திரு. எல்.நரசிம் பிரசாத் அவர்கள் மேற்படி பள்ளி நிர்வாகத்தினரிடம் வழங்கினார்.

மிக நீண்ட நிலம் எடுப்பு சட்டநடைமுறையை பின்பற்றுவதைவிட எளிய நேரடி பேச்சுவார்த்தை மூலமாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு நிலத்தை தர, நில உரிமையாளர்கள் தற்போது ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் திரு கே.தர்ப்பகராஜ் மற்றும் திரு. என்.சத்தியநாராயணன், தலைமைப் பொது மேலாளர் (மனிதவளம்) திரு ஜி.இராஜரத்தினம் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.